(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 538/2023 அ.சா.3

Name : திருமதி. அனுஷா மனோகரி

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.09.2026.

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்பொழுது அவனியாபுரம் காவல் நிலைய குற்றபிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான திருமதி.C.விமலா என்பவர் தற்பொழுது மருத்துவ விடுப்பில் இருந்து வருவதாலும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராக முடியாத காரணத்தினாலும் ஆவணத்தின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 13.05.2022–ம் தேதி 11.00 மணிக்கு அவனியாபுரம் காவல்நிலைய உதவி ஆய்வாளராகிய சாட்சி எண்.8 **திரு.ஜெயப்பாண்டியன்** பொறுப்பிலிருக்கும்போது 11.00 மணிக்கு மதுரை, அவனியாபுரம், செம்பூரணி ரோடு, கதவு எண்:36/2 என்ற முகவரியைச் சேர்ந்த பெரியசாமி அவர்களின் மகன் கண்ணன் வயது 44 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப அவனியாபுரம் காவல்நிலைய குற்ற எண் 297/2022 U/s 392, 397, 506 (ii) IPC ஆக வழக்கு பதிவு செய்தார். **புகார் மனு அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **முதல் தகவல் அறிக்கை அ.சாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கு கோப்பினை பெற்று சம்பவ இடத்திற்கு

12.00 மணிக்குச் சென்று சாட்சிகள் சாட்சி எண்.4 காமராஜ் மற்றும் சாட்சி எண்.5 சத்தியராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகஜர் அசா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த **மாதிரி வரைபடம் அ.சாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகளை விசாரணை செய்தும் ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்பேரில் இவ்வழக்கின் எதிரியை அவனியாபுரம், வள்ளானந்தபுரம், ஆஞ்சநேயர் கோவில் அருகில் வைத்து 15.30 மணிக்கு சாட்சிகள் சாட்சி எண்.6 சேகர் மற்றும் சாட்சி எண்.7 ஜெயவேல் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரியை கைது செய்துள்ளார். எதிரி எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தைகளுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி எடுத்து ஆஜர் செய்த சூரி கத்தி மற்றும் ரூ.500/– ஆகியவற்றை மாலை 05.00 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த சூரி கத்தியின் போட்டோ **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கைப்பற்றிய சான்றுப் பொருட்களை கனம் நீதித்துறை நடுவர் எண்.6–ல் சமர்பித்து RPR.No.881/2022 என பெற்றுள்ளார். அந்த **படிவம்–91 அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகளை விசாரணை செய்தும் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 17.30 மணிக்கு நிலையத்திற்கு கொண்டு வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்துள்ளார். மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் கட்டளைகள் முறையே பின்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற காவல் அடைப்பு செய்துள்ளார். புலன் விசாரணையை முடித்து எதிரி மீது காவல்நிலைய பிரிவுகள் 392, 397, 506(ii) IPC ன் கீழ் சாட்சி எண்.9 விமலா காவல் ஆய்வாளர் அவர்கள் 12.10.2022ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் குறிப்பிடுவது போல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சார்பு ஆய்வாளர் புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றும், காவல் ஆய்வாளர் திருமதி.விமலா சம்பவ இடம் சென்று புலன் விசாரணை மேற்கொண்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்யவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின் யோசனையுடன் எதிரியை சட்டத்திற்கு புறம்பாக குற்ற சம்பவத்துடன் இணைத்து முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

Sd/- அனுஷா மனோகரி

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.09.07 06:34:02 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.